### சேது பொறியியல் கல்லூரியில்

# புதிய கண்டுபிடிப்பு போட்டி



சேது பொறியியல் கல்லூரியில் நடந்த இன்னோவேடிவ் போட்டியில் மாணவ, மாணவிகளின் புதிய கண்டுபிடிப்புகளை கல்லூரி நிறுவனர் எஸ்.முகமது ஜலில், முதன்மை நிர்வாக அதிகாரி எஸ்எம்.சீனி முகைதீன், இணை முதன்மை நிர்வாக அதிகாரி எஸ்.எம்.சீனி முகமது அலியார் மற்றும் சிறப்பு விருந்தினர்கள் பார்வையிட்டனர்.

## மாணவர்கள் அசத்தல்

மதுரை, ஜன. 22: மதுரை அருகே உள்ள சேது பொறியியல் கல்லூரியின் ஆராய்ச்சி கழகம் சார்பாக கல்லூரி மாணவர்களுக்கான நியூ இன்னோவேடிவ் ப்ராஜெக்ட் இன்னோவேஷன் போட்டிகள் மற்றும் உலக அளவிலான கருத்தரங்கு நடைபெற்றது.

நிகழ்விற்கு கல்லூரி நிறுவனர் எஸ்.முகமது ஜலில் தலைமை தாங்கி துவக்கி வைத்தார். கல்லூரி நிர்வாக அதிகாரிகள் எஸ்.எம்.சீனி முகைதீன், எஸ்.எம்.சீனி முகமது அலியார், எஸ்.எம். நிலோபர் பாத்திமா, எஸ்.எம்.நாசியா பாத்திமா முன்னிலை வகித்தனர். முதல்வர் சிவக்குமார் வரவேற்றார். சிறப்பு விருந்தினராக மலேசியா ஜெகர்தா ஏசியன் இன்டர்நேஷனல் அட்வகேசி ஹெல்த் கேர் இயக்குனர் டாக்டர் உஸ்மான்த் பழனி, மலேசியா சைபர் ஜெயா பல்கலைக்கழகத்தின் பயோ மெடிக்கல் பொறியியல் மையத்தின் இயக்குனர் டாக்டர் நூர் கமாலியா சஹாரி கலந்து கொண்டனர். இதில் 150 புதிய கண்டுபிடிப்புகளை மாணவ, மாணவிகள் சமர்ப்பித்தனர். இதில் 19 குழுக்கள் பரிசுகள் பெற்றன. முதல் இடத்தை ரயில் இன்வெர்ட்டர் குழுவும் இரண்டாவது இடத்தை ஸ்மார்ட் விஷன் குழுவும் மூன்றாவது இடத்தை ட்ரபிள் ஷூட்டர் குழுவும் பெற்றது. வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுத் தொகை வழங்கப்பட்டது. நிகழ்வினை ஆராய்ச்சி கழக நிர்வாகிகள் பேராசிரியர்கள் பாரிசா பேகம், தமிழ்ச்செல்வி, முத்துச்சோலை, ராஜன், புனிதா, மகாலட்சுமி, குரு பிரகாஷ் மற்றும் மாணவ, மாணவிகள் செய்திருந்தனர். கல்லூரி டீன்கள் ஷாநவாஸ், சிவரஞ்சனி, தேர்வுத்துறை தலைவர் முரளி கண்ணன், துறை தலைவர்கள், பேராசிரியர்கள் கலந்து கொண்டனர்.

**Dinakaran 22.01.2025**



# சேது பொறியியல் கல்லூரியில் மாணவர்களுக்கான போட்டிகள்

மதுரை, ஜன.24–

மதுரை அருகே உள்ள சேது பொறியியல் கல்லூரியின் ஆராய்ச்சி கழகம் சார்பாக கல்லூரி மாணவர்களுக்கான நியூ இன்னவெடிவ் ப்ராஜெக்ட் இன்வோஜன் போட்டிகள் மற்றும் உலக அளவிலான கருத்தரங்கு நடைபெற்றது. நிகழ்விற்கு கல்லூரி நிறுவனர் முகமது ஜலில் தலைமை தாங்கினார். கல்லூரி நிர்வாக அதிகாரிகள் சீனி முகைதீன், சீனி முகமது அலியார், நிலோபர் பாத்திமா, நாசியா பாத்திமா முன்னிலை வகித்தனர். முதல்வர் வரவேற்றார். சிறப்பு விருந்தினராக மலேசியா ஜெகர்தா ஏசியன் இன்டர்நேஷனல் அட்வகேசி ஹெல்த் கேர் இயக்குனர் டாக்டர் உஸ்மான்த் பழனி, மலேசியா சைபர் ஜெயா பல்கலைக்கழகத்தின் பயோ மெடிக்கல் பொறியியல் மையத்தின் இயக்குனர் டாக்டர் நூர் கமாலியா சஹாரி கலந்து கொண்டனர். இதில் 150 புதிய கண்டுபிடிப்புகளை மாணவ, மாணவிகள் சமர்ப்பித்தனர். இதில் 19 குழுக்கள் பரிசுகள் பெற்றன. முதல் இடத்தை ரெயில் இன்வெர்ட்டர் குழுவும், 2–வது இடத்தை ஸ்மார்ட் விஷன் குழுவும், 3–வது இடத்தை ட்ரபிள் ஷூட்டர் குழுவும் பெற்றது. வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுத்தொகை மற்றும் சான்றிதழ்களை விருதுநகர் கலெக்டர் ஜெயசீலன் பங்கேற்று வழங்கினார். இதற்கான ஏற்பாடுகளை ஆராய்ச்சி கழக நிர்வாகிகள், பேராசிரியர்கள் மற்றும் மாணவ, மாணவிகள் செய்து இருந்தனர்.

**Dinathanthi 24.01.2025**

சேது பொறியியல் கல்லூரியில்

# தேசிய அறிவியல் தின கண்காட்சி



▶ மதுரையை அடுத்த சேது பொறியியல் கல்லூரியில் நடந்த தேசிய அறிவியல் தின கண்காட்சியை கல்லூரி நிறுவனர் மற்றும் தலைவர் எஸ்.முகமது ஜலீல் பார்வையிட்டார். முதல்வர் சிவக்குமார், முதலாம் ஆண்டு டீன் மோகன லக்ஷ்மி மற்றும் பேராசிரியர்கள் அருகில் உள்ளனர்.

மதுரை, மார்ச் 2: மதுரை அருகே உள்ள சேது பொறியியல் கல்லூரியில். முதலாம் ஆண்டு மாணவர்கள் சார்பாக தேசிய அறிவியல் தினம் கொண்டாடப்பட்டது. இதில் மாணவ, மாணவிகளின் திட்ட விளக்க கண்காட்சி மற்றும் வினாடி வினா போட்டிகள் நடத்தப்பட்டது.

இதனை கல்லூரி தலைவர் மற்றும் நிறுவனர் எஸ்.முகமது ஜலில் தலைமை தாங்கி துவக்கி வைத்தார். முதன்மை நிர்வாக அலுவலர் எஸ்எம்.சீனி முகைதீன், இணை முதன்மை நிர்வாக அலுவலர் எஸ்எம்.சீனி முகமது அலியார் மரைக்காயர், நிர்வாக இயக்குநர் எஸ்எம்.நிலோஃபர் பாத்திமா, ஆராய்ச்சி இயக்குநர் எஸ்எம். நாசியா பாத்திமா, முதல்வர் சிவக்குமார், டீன் ஷாநவாஸ் உள்ளிட்டோர் கண்காட்சியை பார்வையிட்டு மாணவர்களை பாராட்டினர்.

இதில் வெற்றி பெறும் மாணவர்களுக்கு சான்றிதழ்கள், பரிசுகள் வழங்கப்பட உள்ளன. இந்த நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை முதலாமாண்டு டீன் மோகன லக்ஷ்மி தலைமையில், பல்வேறு துறைத் தலைவர்கள் மற்றும் பேராசிரியர்கள், மாணவர்கள் செய்திருந்தனர்.

**Dinakaran 02.03.2025**

## சேது பொறியியல் கல்லூரியில்

# தொழில்நுட்ப வளர்ச்சி குறித்த பயிற்சி பட்டறை



சேது பொறியியல் கல்லூரியில் அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சி குறித்த பயிற்சி பட்டறையை, கல்லூரி நிறுவனர் மற்றும் தலைவர் எஸ்.முகமது ஜலீல் துவக்கி வைத்து பேசினார். கல்லூரி முதல்வர் சிவக்குமார், துறைத்தலைவர் நாகேஸ்வரி அருகில் உள்ளனர்.

மதுரை, மார்ச் 4: மதுரை அருகே உள்ள சேது பொறியியல் கல்லூரியில், பயோடெக் துறை சார்பாக 9 முதல் 12ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சி பற்றிய பயிற்சி பட்டறை நடத்தப்பட்டது. இந்நிகழ்வினை கல்லூரி நிறுவனர் மற்றும் தலைவர் எஸ்.முகமது ஜலீல் தலைமை தாங்கி துவக்கி வைத்தார். கல்லூரி முதன்மை நிர்வாக அதிகாரி எஸ்எம்.சீனி முகைதீன், இணை முதன்மை நிர்வாக அதிகாரி எஸ்எம். சீனி முகம்மது அலியார் மறைக்காயர், கல்லூரி நிர்வாக இயக்குனர் எஸ்எம். நிலோஃபர் பாத்திமா, ஆராய்ச்சி இயக்குனர் எஸ்எம்.நாசியா பாத்திமா முன்னிலை வகித்தனர். முதல்வர் சிவக்குமார் வாழ்த்துரை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் 30க்கும் மேற்பட்ட பள்ளிகளில் இருந்து 200க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் கலந்துகொண்டனர். இதில் மூலக்கூறு உயிரியல், மரபணு பொறியியல், உயிரியல் செயல்முறை, பொறியியல், தாவர திசு வளர்ப்பு உள்ளிட்ட தலைப்புகளில் பயிற்சி அளிக்கப்பட்டு தொழில்நுட்ப ஆய்வகங்களுக்கு மாணவ, மாணவிகள் அழைத்துச் செல்லப்பட்டனர். நிகழ்வினை பயோடெக்துறை தலைவர் நாகேஸ்வரி தலைமையில் துறை பேராசிரியர்கள், மாணவர்கள் செய்திருந்தனர்.

**Dinakaran 04.03.2025**

# சேது பொறியியல் கல்லூரியில் தகவல் தொழில்நுட்ப பயிற்சி பட்டறை




மதுரை,மார்ச்.4-. மதுரை அருகே உள்ள சேது பொறியியல் கல்லூரியில் தகவல் தொழில்நுட்பம் துறை சார்பில் தகவல் தொழில் நுட்ப பயிற்சியும் மற்றும் துறை கழக விழாவும் நடத்தப்பட்டது. நிகழ்வில் துறையில் சிறந்து விளங்கிய மாணவ-மாணவிகளுக்கு பாராட்டும் மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை பற்றிய மலரும் வெளியிடப்பட்டது. கல்லூரி தலைவர் மற்றும் நிறுவனர் எஸ்.முகமது ஜலில் தலைமை தாங்கினார். கல்லூரி நிர்வாக அதிகாரிகள் சீனி முகைதீன், சீனி முகமது அலியார் மறைக்காயர், நிலாபர் பாத்திமா, நாசியா பாத்திமா ஆகியோர் முன்னிலை வகித்தனர். முதல்வர் சிவக்குமார், டீன் சிவரஞ்சனி வாழ்த்துரை வழங்கினார்கள். நிகழ்வில் சிறப்பு விருந்தினராக பெங்களூரு ஹேப்பியஸ்ட் மைன்ஸ் டெக்னாலஜி லிமிடெட் மேலாளர் ஜான் பால் ஆண்டனி கலந்துகொண்டு மாணவர்களிடம் எமர்ஜிங் டெக்னாலஜி என்ற தலைப்பில் பேசினார்.

இதற்கான ஏற்பாடுகளை தகவல் தொழில்நுட்ப துறை தலைவி பூமணி என்ற புனிதா தலைமையில் துறை பேராசிரியர்கள், மாணவ-மாணவிகள் செய்திருந்தனர்.

**Dinathanthi 04.03.2025**

வருகின்றனர்.

## சேது பொறியியல் கல்லூரியில்

# மின்னணுவியல் துறை கருத்தரங்கம்



► சேது பொறியியல் கல்லூரியில் மின்னணுவியல் மற்றும் தகவல் தொடர்புத்துறை சார்பில் நடந்த பன்னாட்டு கருத்தரங்க மலரை, சிறப்பு விருந்தினர்கள் சதீஷ்குமார், குரு லட்சுமி வெளியிட்டனர். பேராசிரியர்கள் சேக் தாவூத், ராஜலட்சுமி அருகில் உள்ளனர்.

மதுரை, ஏப். 5: மதுரை அருகே உள்ள சேது பொறியியல் கல்லூரி மின்னணுவியல் மற்றும் தகவல் தொடர்பு துறை சார்பாக. கல்லூரி வளாகத்தில் பன்னாட்டு கருத்தரங்கம் நடத்தப்பட்டது. நிகழ்விற்கு கல்லூரி தலைவர் மற்றும் நிறுவனர் எஸ். முகமது ஜலில் தலைமை தாங்கினார். கல்லூரி முதன்மை நிர்வாக அதிகாரி எஸ்.எம்.சீனி முகைதீன், இணை முதன்மை நிர்வாக அதிகாரி எஸ். எம்.சீனி முகமது அலியார் மறைக்காயர், கல்லூரி நிர்வாக இயக்குநர் எஸ். எம்.நிலாஃபர் பாத்திமா, ஆராய்ச்சி இயக்குனர் எஸ்.எம.நாசியா பாத்திமா முன்னிலை வகித்தனர். முதல்வர் சிவகுமார் வாழ்த்துரை வழங்கினார்.

சிறப்பு விருந்தினர்களாக சென்னை எலக்ட்ரிகல் இன்ஜினியர்ஸ் மென்பொருள் நிர்வாக இயக்குனர் சதீஷ்குமார், நியூ ஹாரிசன் பொறியியல் கல்லூரி பேராசிரியை குரு லட்சுமி கலந்துகொண்டு பேசினார்கள். நிகழ்வில் விழாமலர் வெளியிடப்பட்டது. பேராசிரியர் ராஜலக்ஷ்மி வரவேற்றார். பேராசிரியர் சேக் தாவூத் நன்றி கூறினார். பல்வேறு கல்லூரிகளில் இருந்து 100க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர். கருத்தரங்கு ஏற்பாட்டை துறை தலைவர் பாரிசா பேகம் தலைமையில், பேராசிரியர்கள் ராஜலட்சுமி, சத்தியநாதன், மனோஜ் குமார், மகேஸ்வரி மற்றும் மாணவ, மாணவிகள் செய்திருந்தனர்.

**Dinakaran 05.04.2025**

## சேது பொறியியல் கல்லூரியில்

# தேசிய அளவிலான கருத்தரங்கம்



சேது பொறியியல் கல்லூரி வேளாண் பொறியியல் துறை சார்பில் நடந்த கருத்தரங்கில், விருதுநகர் மாவட்ட வேளாண் இணை இயக்குநர் விஜயா மற்றும் துணை இயக்குநர் சுமதிக்கு கல்லூரி முதல்வர் சிவக்குமார் நினைவு பரிசு வழங்கினார். உடன் வேளாண் பொறியியல் துறை தலைவர் முத்துச்சோலை ராஜன்.

மதுரை, மார்ச் 6: மதுரை அருகே உள்ள சேது பொறியியல் கல்லூரி வேளாண் பொறியியல்துறை சார்பாக தேசிய அளவிலான கருத்தரங்கம் நடத்தப்பட்டது. இந்நிகழ்விற்கு கல்லூரி தலைவர் மற்றும் நிறுவனர் எஸ். முகமது ஜலீல் தலைமை தாங்கினார். கல்லூரி முதன்மை நிர்வாக அதிகாரி எஸ்.எம்.சீனி முகைதீன், இணை முதன்மை நிர்வாக அதிகாரி எஸ்.எம்.சீனி முகமது அலியார் மரைக்காயர், நிர்வாக இயக்குநர் எஸ்.எம்.நிலோபர் பாத்திமா, ஆராய்ச்சி இயக்குநர் எஸ்.எம்.நாசியா பாத்திமா ஆகியோர் முன்னிலை வகித்தனர். முதல்வர் சிவக்குமார் வாழ்த்துரை வழங்கினார்.

சிறப்பு விருந்தினராக விருதுநகர் மாவட்ட வேளாண் துறை இணை இயக்குனர் விஜயா மற்றும் துணை இயக்குனர் சுமதி ஆகியோர் கலந்துகொண்டு பேசினர். வேளாண் பொறியியல் துறை சார்பாக புதுமையின் தொகுப்பு வரலாறு அடங்கிய மலர் வெளியிடப்பட்டது. நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை வேளாண் பொறியியல் துறை தலைவர் முத்துச்சோலை ராஜன் தலைமையில், பேராசிரியர்கள், மாணவர்கள் செய்திருந்தனர்.

**Dinakaran 06.03.2025**

# சேது என்ஜினீயரிங் கல்லூரியில் கருத்தரங்கு



மதுரை, மார்ச்.7- மதுரை அருகே சேது என்ஜினீயரிங் கல்லூரியில் பயோ டெக்னாலஜி பொறியியல் துறை சார்பாக தேசிய அளவிலான கருத்தரங்கு நடந்தது. கல்லூரி நிறுவனர் மற்றும் தலைவர் முகமது ஜலீல் தலைமை தாங்கி தொடங்கி வைத்தார். கல்லூரி முதன்மை நிர்வாக அதிகாரி சீனி முகைதீன், இணை முதன்மை நிர்வாக அதிகாரி சீனி முகமது அலியார் மரைக்காயர், நிர்வாக இயக்குனர் நிலோபர் பாத்திமா, ஆராய்ச்சி இயக்குனர் நாசியா பாத்திமா ஆகியோர் முன்னிலை வகித்தனர். சிறப்பு விருந்தினர்களாக ஐ.சி.எம்.ஆர். மூத்த விஞ்ஞானி மாரியப்பன், துபாய் ஆகாஷ் பிளான்டேஷன் மூத்த விஞ்ஞானி ரவீந்திர சிங் ஆகியோர் கலந்துகொண்டு பேசினர். நிகழ்வினை பயோடெக் துறை தலைவி நாகேஸ்வரி தலைமையில் துறை பேராசிரியர்கள் மற்றும் மாணவ, மாணவிகள் செய்திருந்தனர்.

Dinathanthi 07.03.2025



# சேது என்ஜினீயரிங் கல்லூரியில் மகளிர் தின விழா

மதுரை, மார்ச்.9–

மதுரை அருகே உள்ள சேது என்ஜினீயரிங் கல்லூரியில் மகளிர் தினம் கொண்டாடப்பட்டது. கல்லூரி தலைவர் மற்றும் நிறுவனர் எஸ்.முகமது ஜலீல் தலைமை தாங்கினார். கல்லூரி நிர்வாக அதிகாரிகள் சீனி முகைதீன், சீனி முகமது அலியார் மரைக்காயர், நிலோபர் பாத்திமா, நாசியா பாத்திமா முன்னிலை வகித்தனர். சிறப்பு விருந்தினராக பொருளாதார குற்றவியல் போலீஸ் துணை சூப்பிரண்டு மானிஷா, மதுரை ஐகோர்ட்டு வக்கீல் சிவசங்கரி ஆகியோர் கலந்துகொண்டு பேசினார்கள்.

இதையொட்டி மதுரை ஸ்பைஸ் வித்யாலயா பள்ளி குழந்தைகளின் கலைநிகழ்ச்சி, சமூக சேவையாளர்களுக்கு விருது வழங்கப்பட்டது. சிறப்பு விருந்தினரான துணை சூப்பிரண்டு மானிஷா பேசுகையில், மாணவிகள் கல்வி, ஆரோக்கியம், தாங்கள் தேர்ந்தெடுக்கும் ஆண் துணை ஆகியவற்றில் கவனமாக இருக்க வேண்டும். கல்லூரி காலங்களில் தேவையற்ற சிந்தனைகளாலும், பழக்கங்களாலும் நாம் அடையப்போகும் இலக்கின் வெற்றியை சீரழிக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும். டி.என்.பி.எஸ்.சி., யூ.பி.எஸ்.சி. தேர்வுகளில் கடின உழைப்பினால் வெற்றிபெற முடியும் என்றார். ஏற்பாடுகளை கல்லூரி மகளிர் மேம்பாட்டு துறை ஒருங்கிணைப்பாளர்கள் பேராசிரியை ஜெயசாந்தி, பாண்டிமாதேவி மற்றும் உறுப்பினர்கள் செய்திருந்தனர்.

Dinathanthi 09.03.2025

### சேது பொறியியல் கல்லூரிக்கு

# கணினிகள் பரிசளித்த முன்னாள் மாணவர்கள்



சேது பொறியியல் கல்லூரி மின்னணுவியல் மற்றும் தகவல் தொடர்புத்துறை முன்னாள் மாணவ, மாணவிகள் தங்களது துறைக்கு 4 கணினிகளை பரிசளித்தனர்.

மதுரை, மார்ச் 19: மதுரை அருகே உள்ள சேது பொறியியல் கல்லூரியில், மின்னணுவியல் மற்றும் தகவல் தொடர்பு துறையில் படித்த முன்னாள் மாணவ, மாணவிகள் தங்களது துறைக்கு 4 கணினிகளை வழங்கினர். இந்நிகழ்விற்கு கல்லூரி தலைவர் மற்றும் நிறுவனர் எஸ்.முகமது ஜலில் தலைமை வகித்தார். கல்லூரி நிர்வாக முதன்மை அலுவலர் எஸ்.எம்.சினி முஹைதீன், இணை நிர்வாக முதன்மை அலுவலர் எஸ்.எம்.சீனி முகம்மது அலியார் மரைக்காயர், நிர்வாக இயக்குனர் எஸ்.எம். நிலோபர் பாத்திமா, ஆராய்ச்சி இயக்குனர் எஸ்.எம். நாசியா பாத்திமா, முதல்வர் சிவக்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். முன்னாள் மாணவர்களிடமிருந்து கம்யூட்டர்களை துறை தலைவி பாரிஷா பேகம் பேராசிரியர்கள் தமிழ்ச்செல்வி ஷேக் தாவூத் சாகுல் ஹமீது மற்றும் துறை பேராசிரியர்கள் பெற்றுக் கொண்டனர். கணினி வழங்கிய முன்னாள் மாணவர்களை கல்லூரி நிறுவனர் நிர்வாக அதிகாரிகள் துறை பேராசிரியர்கள் பாராட்டினர்.

**Dinakaran 19.03.2025**




**THE HINDU 26.03.2025**

# CAMPUS CONNECT

## Mercy or law

The English Literary Club of the Department of English at Sethu Institute of Technology, Kariapatti, conducted an event - Mercy or Law: A Courtroom Clash, which saw the enactment of a scene from William Shakespeare's The Merchant of Venice, on March 20. The event was marked by passionate performances from the first-year students, followed by an insightful musical rendition that added a unique dimension to the gathering. R. Saranya, HoD (in charge), welcomed the gathering. Sarojaa V Kumar, Assistant Professor of English, Mannar Thirumalai Naicker College, Madurai, was the chief guest. She commended the students for their engaging performance and their ability to bring Shakespeare's complex themes of justice, mercy, and law to life. She offered constructive suggestions and tips to further enhance their acting skills, encouraging them to continue exploring classical literature with creativity and passion. The event was organised by Literary Club Coordinators Muthumurugan and Merlin. The students showcased not only their acting prowess but also their understanding of the intricate moral dilemmas presented in the courtroom scene. The performance was complemented by a beautiful singing session by the first-year students. The event served as a platform for fostering literary talent and creativity.



A scene from William Shakespeare's The Merchant of Venice being enacted at Sethu Institute of Technology, Kariapatti.

**THE HINDU 25.03.2025**

## சேது பொறியியல் கல்லூரியில்

# மாணவர்களுக்கு ஊக்கத்தொகை தேர்வு

மதுரை, ஏப். 27: மதுரை அருகே உள்ள சேது பொறியியல் கல்லூரி வளாகத்தில், கணிதம், இயற்பியல், வேதியியல் பாடங்களுடன் பிளஸ் 2 பொதுத்தேர்வு எழுதி முடிவுகளுக்காக காத்திருக்கும் மாணவ, மாணவிகளுக்கான ஊக்கத்தொகை தேர்வு நடைபெற்றது. இத்தேர்வு கல்லூரி நிறுவனர் மற்றும் தலைவர் எஸ்.முகமது ஜலீல் தலைமையில், நிர்வாக அதிகாரிகள் எஸ்எம்.சீனி முகைதீன், எஸ்எம். சீனி முகமது அலியார், எஸ்எம்.நிலோபர் பாத்திமா, எஸ்எம்.நாசியா பாத்திமா ஆகியோர் முன்னிலையில், கல்லூரி முதல்வர் சிவக்குமார் மேற்பார்வையில் நடைபெற்றது.



▶ சேது பொறியியல் கல்லூரியில் நடந்த ஊக்கத்தொகை தேர்வில் பங்கேற்ற மாணவர்களின் பெற்றோர்களுக்கு, பொறியியல் கல்வியின் முக்கியத்துவம், வேலை வாய்ப்புகள் குறித்து விளக்கம் அளிக்கப்பட்டது.

இத்தேர்வு கணிதம், இயற்பியல், வேதியல் பாடங்களில் இருந்து 45 வினாக்கள் மற்றும் ஐந்து பொது அறிவு வினாக்கள் என மொத்தம் 50 வினாக்களுக்கு 100 மார்க் என்ற அடிப்படையில் நடைபெற்றது. இதில் பங்கேற்றோர் பொதுத்தேர்வில் இந்தப் பாடங்களில் எடுத்த மதிப்பெண், ஊக்கத்தொகை தேர்வில் எடுத்த மதிப்பெண் ஆகியவற்றை சேர்த்து தரவரிசை பட்டியல் தயாரிக்கப்பட்டு, அவர்களுக்கு ரூ.10000 முதல் இரண்டு லட்சம் வரை பரிசு தொகை வழங்கப்பட உள்ளது.

இத்தேர்வில் மதுரை, விருதுநகர், ராமநாதபுரம், சிவகங்கை, தேனி, திண்டுக்கல், தென்காசி மாவட்டங்களை சேர்ந்த ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர். கல்லூரி டீன்கள், துறை தலைவர்கள் மாணவர்களுடன் வந்திருந்த பெற்றோர்களுக்கு பொறியியல் படிப்பின் முக்கியத்துவம், துறை சார்ந்த வேலை வாய்ப்புகள் குறித்து விளக்கம் அளித்தனர். கல்லூரி தேர்வாணைய கழகம் சார்பாக, இத்தேர்வு நடத்தப்பட்டது.

**Dinakaran 27.04.2025**

## சேது பொறியியல் கல்லூரியில்

# தொழில்நுட்ப பயிற்சி பட்டறை



சேது பொறியியல் கல்லூரியில் கிரியவன் சைபர் ஃபாரன்சிக் சர்வீஸ் நிறுவனத்துடன் கல்லூரி தலைவர் எஸ்.முகமது ஜலில் மற்றும் நிறுவனத்தின் இயக்குநர் அசோக்குமார் மோகன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். உடன் கல்லூரி நிர்வாக அதிகாரிகள் எஸ்.எம்.சீனிமுகைதீன், எஸ்.எம் சீனிமுகமது அலியார், எஸ்.எம்.நிலோபர் பாத்திமா, எஸ்.எம்.நாசியா பாத்திமா உள்ளனர்.

மதுரை, ஜூன் 24: மதுரை அருகே உள்ள சேது பொறியியல் கல்லூரியின் கணினி அறிவியல் மற்றும் பொறியியல் துறை (ஏஐ & எம்எல்) சைபர் செக்யூரிட்டி பொறியியல் துறை இணைந்து சைபர் செக்யூரிட்டி பாதுகாப்பில் நடைமுறை நுண்ணறிவு மூலம் கல்வியாளர்களின் திறன்களை மேம்படுத்துதல் என்ற தலைப்பில். 5 நாள் பயிற்சி பட்டறை நடத்தப்பட்டது. கல்லூரி தலைவர் மற்றும் நிறுவனர் எஸ்.முகமது ஜலில் தலைமை தாங்கினார். கல்லூரி முதன்மை நிர்வாக அதிகாரி எஸ்.எம். சீனி முகைதீன், இணை முதன்மை நிர்வாக அதிகாரி எஸ்.எம்.சீனி முகமது அலியார் மறைக்காயர். நிர்வாக இயக்குநர் எஸ்.எம்.நிலோபர் பாத்திமா, ஆராய்ச்சி இயக்குநர் எஸ்.எம்.நாசியா பாத்திமா முன்னிலை வகித்தனர். முதல்வர் சிவக்குமார், ஐக்யூ ஏசி டீன் சிவரஞ்சனி வாழ்த்துரை வழங்கினர்.

இந்நிகழ்வில் கிரியாவன் சைபர் ஃபாரன்சிக் சர்வீஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துடன், கல்லூரி தலைவர் எஸ்.முகமது ஜலில், நிறுவனத்தின் இயக்குநர் அசோக்குமார் மோகன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். இதன் மூலம் சைபர் பாதுகாப்பு துறையின் ஆராய்ச்சி பற்றியும் மாணவ, மாணவிகளுக்கான திட்டங்கள் பற்றியும், தொழில்நுட்ப பயிற்சிகளையும் மற்றும் கல்வித்துறைக்கும் தொழில்துறைக்கும் இடையான இடைவெளியை குறைக்கவும், நவீன இணைய அச்சுறுத்தல்களை சமாளிக்க தேவையான திறன்களை வளர்க்கவும், பாதுகாப்பான டிஜிட்டல் சுற்றுச்சூழல் அமைவதற்கு பயனாக இருக்கும். நிகழ்விற்கான ஏற்பாடுகளை ஏஐ & எம்எல் துறைத்தலைவர் குரு பிரகாஷ், சைபர் செக்யூரிட்டி பொறியியல் துறை தலைவர் நாகலட்சுமி, துறை பேராசிரியர்கள் மற்றும் மாணவ, மாணவிகள் செய்திருந்தனர்.

Dinakaran 24.06.2025

## மாநில பேச்சுப்போட்டியில் முதலிடம்

# சேது பொறியியல் கல்லூரி மாணவிக்கு பாராட்டு




► தமிழ்நாடு சிறுபான்மையினர் ஆணைய பேச்சு போட்டியில் முதலிடம் பிடித்த மாணவி லக் ஷயாவிற்கு, சேது பொறியியல் கல்லூரி நிர்வாக அதிகாரிகள் எஸ்.எம். சீனி முகம்மது அலியார், எஸ்.எம்.நிலோபர் பாத்திமா, எஸ்.எம்.நாசியா பாத்திமா, முதல்வர் சிவக்குமார் பாராட்டு தெரிவித்தனர். உடன் வேளாண் பொறியியல் துறை தலைவர் முத்துச்சோலை ராஜன்.

**மதுரை, ஜூலை 22:** தமிழ்நாடு சிறுபான்மையினர் ஆணையம் சார்பாக நடத்தப்பட்ட பேச்சுப் போட்டியில், முதலிடம் பிடித்த சேது பொறியியல் கல்லூரி மாணவியை நிர்வாகிகள் பாராட்டினர்.

தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம் சார்பில், அனைத்து கல்லூரி மாணவ, மாணவிகளுக்கான பேச்சுப் போட்டி விருதுநகர் மாவட்ட அளவில் நடந்தது. இதில் ஆங்கில பேச்சுப்போட்டியில் காரியாபட்டி சேது பொறியியல் கல்லூரி வேளாண் பொறியியல் துறை 2ம் ஆண்டு மாணவி லக் ஷயா, முதலிடம் பெற்றார். சென்னையில் நடந்த விழாவில் அமைச்சர்கள் கோவி. செழியன், ஆவடி நாசர் ஆகியோர், மாணவிக்கு பாராட்டு சான்றிதழ் மற்றும் ரொக்கப்பரிசு வழங்கினர்.

இதில் மாநில சிறுபான்மையினர் ஆணைய தலைவர் அருட்தந்தை சொ.ஜோ. அருண் மற்றும் ஒருங்கிணைப்பாளர்கள் கான்ஸ்டன்டைன் ரவீந்திரன், இறையன்பன் குத்தூஸ், உறுப்பினர் செயலர் ஆசியா மரியம் ஆகியோர் பங்கேற்றனர். மேலும் மாணவி லக் ஷயா சென்னை முகாம் அலுவலகத்தில் நிதியமைச்சர் தங்கம் தென்னரசுவை சந்தித்து வாழ்த்து பெற்றார். இதையடுத்து மாணவிக்கு கல்லூரி நிறுவனர் மற்றும் தலைவர் எஸ்.முகமது ஜலில், முதன்மை நிர்வாக அதிகாரி எஸ்.எம் சீனி முகைதீன், இணை நிர்வாக முதன்மை அதிகாரி எஸ்.எம்.சீனி முகமது அலியார் மரைக்காயர், நிர்வாக இயக்குநர் எஸ்.எம்.நிலோபர் பாத்திமா, ஆராய்ச்சி இயக்குநர் எஸ்.எம்.நாசியா பாத்திமா, முதல்வர் சிவக்குமார் பாராட்டு தெரிவித்தனர்.

**Dinakaran 22.07.2005**

## சேது பொறியியல் கல்லூரியில்

# முதலாண்டு வகுப்பு துவக்க விழா




▶ சேது பொறியியல் கல்லூரியில், முதலாம் ஆண்டு மாணவர்களுக்கான வகுப்புகள் துவக்க விழா நடைபெற்றது.

மதுரை, ஆக. 21: மதுரை அருகே உள்ள சேது பொறியியல் கல்லூரியில் 31வது ஆண்டு முதலாம் ஆண்டு மாணவர்களுக்கான வகுப்புகள் துவக்க விழா நடைபெற்றது. கல்லூரி நிறுவனர் மற்றும் தலைவர் முகமது ஜலில் தலைமை ஏற்றார். கல்லூரி முதன்மை நிர்வாக அதிகாரி எஸ்.எம். சீனி முகைதீன், இணை முதன்மை நிர்வாக அதிகாரி எஸ்.எம்.சீனி முகமது அலியார் மரைக்காயர், நிர்வாக இயக்குனர் எஸ்.எம்.நிலோஃபர் பாத்திமா, ஆராய்ச்சி இயக்குனர் எஸ்.எம்.நாசியா பாத்திமா முன்னிலை வகித்தனர். சிறப்பு விருந்தினர்களாக முன்னாள் எஸ்பி கலியமூர்த்தி மற்றும் பெங்களூரு இந்திய அறிவியல் நிறுவன முதன்மை விஞ்ஞானி கணேசன் கலந்து கொண்டனர்.

ஐக்யூஏசிடிசி டீன் சிவரஞ்சனி மற்றும் தேர்வு கட்டுப்பாட்டு தலைவர் முரளி கண்ணன் சிறப்பு விருந்தினர்களை அறிமுகம் செய்தனர். முதலாம் ஆண்டு டீன் மோகனலக்ஷ்மி வரவேற்புரை வழங்கினார்.

சேது பொறியியல் கல்லூரி நடத்திய ஊக்கத் தொகை தேர்வு மற்றும் பிளஸ் 2 தேர்வில் 180க்கு மேல் கட் ஆப் மதிப்பெண் பெற்று இக்கல்லூரியை தேர்வு செய்த மாணவ, மாணவிகளுக்கு முதல் பரிசாக ஒரு லட்சத்து 75 ஆயிரம், 2வது பரிசு ஒரு லட்சத்து 50 ஆயிரம், 3வது பரிசு 75 ஆயிரம் மற்றும் கல்லூரி பேருந்து சலுகை என 84 மாணவர்களுக்கு ரூ.72 லட்சத்து 50 ஆயிரம் பரிசு தொகை வழங்கப்பட்டது.

இதில் 192.5 கட் ஆப் மார்க் எடுத்த நிவேதா என்ற மாணவிக்கு ஒரு லட்சத்து 75 ஆயிரத்திற்கான காசோலை வழங்கப்பட்டது. கல்லூரி முதல்வர் ஜிடி சிவக்குமார் வாழ்த்துரை வழங்கினார். அகடமிக் டீன் ஷாநவாஸ் நன்றி உரை வழங்கினார். இந்நிகழ்வில், 3000க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள், பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.

**Dinakaran 21.08.2025**